1970 மார்ச் 18]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். ஆசிரியர்கள் நால்வர் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டனர்.

(இ) மயிலை, விவேகானந்தா கல்லூரியில் 1969, ஏப்ரல் எம்.ஏ. பட்டத் தேர்வில் ஒழுங்கீனச் செயல் நடந்ததாக 6-8-1969-ல் சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர், காவல்துறைக்கு அறிவித்தார். புலனாய்விற்குப்பின் அறுவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நால்வர், சென்னை மாநகரக் கல்லூரிகள் சிலவற்றில் ஆசிரியர்களாகப் பணியாற்றிவந்தனர்.

திரு. கே. விநாயகம் : சார், இந்தத் தேர்வுகளிலே, பேராசிரியர்கள் இம் மாதிரி தவறு செய்வது இதுதான் முதல் முறையாக நமக்கும் தெரிகிறது. இப்படி இந்தத் துறையிலே இந்த ஒழுங்கீனங்கள் புகுந்துவிட்டால் கல்வித்தரம் குறைந்துவிடும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இம்மாதிரி இனி நிகழாமல் இருக்க அந்த ஆசிரியர்களைத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கும்பொழுது either for supervision or for setting of papers or for valuation of answer papers. இந்த மூன்று துறையிலேயும் ஒரு Panel of names அமைத்து கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருப்பவர்களையே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்த வாய்ப்பைத்தர அரசாங்கம் முன் வந்தால் இந்தத் தவறுகள், தொல்லைகளெல்லாம் ஏற்படாமல் இருக்க ஏதுவாக இருக்குமே, இதை அரசு ஆராயுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தக்கவர்களைத் தேர்ந் தெடுக்கவேண்டிய அந்த முயற்சியை யூனிவர்சிட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே, அதுபற்றி அவர்கள் அக்கறை செலுத்துவார்கள் என்றே கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, அறுவர் கைது செய்யப்பட்டதாகச் சற்றுமுன் சொன்னார்கள். அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டதா ? தொடரப்பட்டிருந்தால், கோர்ட்டின் தீர்ப்பு எப்படி யிருக்கிறது ? தீர்ப்பிற்குப் பின்னாலே என்ன தண்டனை கொடுக்கப்பட்டது ? அவர்கள் இப்பொழுது பணியில் இருக்கிறார்களா, இல்லையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 5-2-1970-ல் அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. ஐ.பி.சி. 120-பி, 419, 468, 471, 506, 106 இப்பிரிவுகளின்கீழ் குற்றப்பத்திரிகை தயார் செய்து வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.

வட்டப் போலீஸ் அதிகாரிகளுக்கு ஜீப் விநியோகம்

* 430 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்திலுள்ள எல்லா வட்டப்போலீஸ் அதிகாரி (Circle Inspectors) களுக்கு ஜீப் கொடுக்கின்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இம்மாநிலத்தில் ஏற்கெனவே ஜீப் கொடுக்கப்பட்டிராத காவல்துறை வட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு காவலர்வண்டி. (Pickup Van) படிப்படியாகக் கொடுக்கப்படு வதற்கான, காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் செயற்குறிப்பை 1965-ல் அரசு ஒப்புக் கொண்டது. இத் திட்டத்தின்படி முதலில் 25 வண்டிகள் கொடுக்கப்பட்டன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவரவர்களே, வட்டத் தலைநகரங்களில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ் இருப்பதால் அந்த வண்டிகளைக் கொடுத்தால், கிராமப்புறங்களில் நடக்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும். எனவே, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகத்திற்கு ஜீப் கொடுக்க இனி மேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு இந்த வண்டி கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றிக் கேள்வி, அதற்குரிய பதிலைத் தான் சொன்னேன். 146 போலீஸ் வட்டங்களில் ஏறத்தாழ 50 போலீஸ் வட்டங்களுக்கு வாகன வசதியுள்ளது. பிற இடங்களைப்பற்றித்தான் இனி மேல் கவனிக்க வேண்டும்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, ஜீப்புகள் கொடுக்க முடியவில்லை என்றாலும், மோட்டார் சைக்கிளாவது கொடுக்க முடியுமா? அதோடு மட்டுமல்ல, இந்த போலீஸ் வண்டிகளுக்கு இன்ஷூர் செய்வதில்லை என்று பரவலாகத் தகவல் இருக்கிறது. விபத்துக்கள் ஏற்பட்டால், அதிலிருந்து அடிபட்டவர்களை, காயம் பட்டவர்களை நிவாரணம் அளிக்க அரசாங்கம் ஏற்றுச் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஜீப்புகளுக்குப் பதிலாக ஸ்கூட்டரையோ, மோட்டார் சைக்கிளையோ கொடுப்பது என்பது இயலாத காரியம். ஏனென்றால் அவர்களின் தேவையை அது நிச்சயமாகப் பூர்த்தி செய்யாது. இன்ஷூரன்ஸ் பற்றித் தனிக்கேள்வி போட்டால் விளக்கமாகச் சொல்லலாம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, உடனடியாக இந்த ஜீப்புகளை வழங்காத நிலையில், அவசரமாகச் சில கேஸ்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால், தனியாரிடம் அந்த ஜீப்புகளை வாங்கிக்கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதால், அவர்களுக்குச் சலுகைகள் ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதை அரசாங்கம் அறியுமா? ஆகையால் உடனடியாக மாநிலத்திலேயிருக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் எல்லோருக்கும் ஜீப்புகளை அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்களே சொந்த வண்டி வைத்திருக்கிறார்கள். அந்த நேரங்களில் அந்த வண்டிக்கு உரிய கட்டணத்தை காவல் துறை ஏற்றுக்கொள்ளுகிறது. இல்லாவிட்டால் அவசர காலத்தில், அருகாமையிலுள்ள ஏ. ஆர். கேம்பிலுள்ள வண்டியை உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். இனமாக வண்டிகளைப் பெற்று, அதற்காக சலுகைகள் வழங்கப்படுவதாக இல்லை. அப்படித் தனிப்பட்ட புகார்கள் வந்தால் அரசு கவனிக்கும்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, இப்பொழுது இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கெல்லாம் ஜீப்கள் கொடுக்கப்படாத காரணத்தினால் வழக்குகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது மாதிரி கேட்கப்பட்டது. ஜீப்கள் இல்லாவிட்டால் வழக்குகள் கண்டுபிடிக்க முடியாதா? ஜீப்கள் இல்லாத இடங்களில் வழக்குகள் கண்டுபிடிக்கப்படுவது இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஜீப்களுக்கும் வழக்குகள் கண்டுபிடிப்பதற்கும் தொடர்பு இல்லை. சில வேலைகள் துரிதமாக நடைபெறவேண்டுமென்

பதற்காக ஜீப்கள் தேவைப்படுகின்றன. நிதிநிலை அவ்வளவு சௌகரியமாக இல்லாத காரணத்தினால் ஜீப்கள் வாங்குவதில் தாமதம் ஏற்படுகிறதே அல்லாமல் வேறு அல்ல.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Chief Minister to state whether the Government are aware of the fact that on account of the non-availability of these jeeps, to a greater extent in the C.I.D. Department the work which has to be turned out by these Inspectors are affected and if so, when the Government will give more jeeps to the Inspectors in the C.I.D. Department?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிதிநிலை சரியானதும் எல்லா இலாக்காக்களுக்கும் அவர்களுக்குத் தேவையான வண்டி வாகனங்களை அளிப்பதற்கு அரசு முன்வரும். நிதிநிலை சரியாக இல்லாததுதான் அதற்குக் காரணமே தவிர, வேறு இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி: ஐயா, இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்கள் மேல் மட்டத்தில் இருக்கிற டிஸ்டிரிக்ட் அதிகாரிகள், டிவிஷன் அதிகாரிகளோடு நின்றுவிடுகிறது. கீழ் மட்டத்தில் இருக்கிற சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு இதுவரையில் ஒரு வண்டி கூடப் போய்ச் சேரவில்லை. ஆகவே, பழைய வண்டிகள் இருந்தால்கூட, புதிய வண்டிகளைப் பெரிய அதிகாரிகள் எடுத்துக் கொண்டு, பழைய வண்டிகளை சர்கிள் இன்ஸ்பெக்டர் லெவலில் உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேல்மட்ட அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற வண்டிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு வண்டிகள் கொடுக்கப்படுவது பற்றி ஏற்கனவே சொன்னேன். 146 சர்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள், 50 வண்டிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவர்களுக்கு வண்டிகள் கொடுப்பதற்கு 100 ஜீப்களுக்கு மேல் வாங்கவேண்டியிருக்கிறது. அப்படி வாங்குவதற்கு ரூ. 25 லட்சம் தேவைப்படுகிறது. அதோடுகூட ஆண்டுதோறும் இந்த வண்டிகளுடைய பராமரிப்பு செலவுக்கு ரூ. 5 லட்சம் தேவைப்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான் இது தடைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 436, 437, 438 என்னுள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Supply of steel.

* 439 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state: whether there is any shortage of supply of steel in this State this year?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஸ்டீல் குறைவாக வருவதினால், ப்ரொடக்ஷன் மிகவும் குறைந்துபோகிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிறது. அதனால் ஸ்டீல் அதிகமாக சென்டிரல் கவர்மெண்டிலிருந்து வரவழைப்பதற்கு வேண்டிய நடவடிக்கை உடனே எடுக்கப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.